**செய்தி வெளியீடு எண்.53/2017** **நாள்:06.09.2017**

**<u>சென்னைக் குடிநீர் வாரிய குறைதீர்க்கும் கூட்டம்</u>**
**<u>குடிநீர் வாரிய பகுதி அலுவலகங்களில் சனிக்கிழமையன்று (09.09.2017) நடைபெறும் -</u>**
**<u>சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்</u>**

......

சென்னைக் குடிநீர் வாரிய குறைதீர்க்கும் கூட்டம் சனிக்கிழமை **09.09.2017** அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலங்களில் நடைபெறும் என வாரியம் தெரிவிக்கிறது.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், திறந்தவெளிக் கூட்டம் மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை அன்று நடைபெற்று வருகிறது. இம்மாதத்திற்கான திறந்த வெளிக் கூட்டம் **சனிக்கிழமை 09-09-2017** அன்று காலை **10.00** மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த திறந்த வெளிக் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலங்கள் விபரம்

| | | |
|---|---|---|
| பகுதி அலுவலகம் 1 | - | திருவொற்றியூர் |
| பகுதி அலுவலகம் 2 | - | மணலி |
| பகுதி அலுவலகம் 3 | - | மாதவரம் |
| பகுதி அலுவலகம் 4 | - | தண்டையார்பேட்டை |
| பகுதி அலுவலகம் 5 | - | ராயபுரம் |
| பகுதி அலுவலகம் 6 | - | திரு.வி.க.நகர் |
| பகுதி அலுவலகம் 7 | - | அம்பத்தூர் |
| பகுதி அலுவலகம் 8 | - | அண்ணா நகர் |
| பகுதி அலுவலகம் 9 | - | தேனாம்பேட்டை |
| பகுதி அலுவலகம் 10 | - | கோடம்பாக்கம் |
| பகுதி அலுவலகம் 11 | - | வளசரவாக்கம் |
| பகுதி அலுவலகம் 12 | - | ஆலந்தூர் |
| பகுதி அலுவலகம் 13 | - | அடையாறு |
| பகுதி அலுவலகம் 14 | - | பெருங்குடி |
| பகுதி அலுவலகம் 15 | - | சோழிங்கநல்லூர் |

இந்த திறந்த வெளிக்கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன் பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் ஒவ்வொரு மாதமும் இக் கூட்டம் நடைபெற்று வருகிறது. எனவே இந்த குறைதீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக் கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.

கடந்த மாதம் ஆகஸ்டு 2017ல் நடைபெற்ற குறைதீர்க்கும் கூட்டத்தில் குடிநீர் மற்றும் கழிவுநீர் சம்பந்தமாக 66 மனுக்கள் பெறப்பட்டதில் 60 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்